செ.வெ.எண்-38 நாள்-23.07.2019

# அரியலூர் மாவட்டம், இலுப்பையூர் கிராமத்திலுள்ள வேங்கன் ஏரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், இலுப்பையூர் கிராமத்தில் உள்ள வேங்கன் ஏரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது :-**

அரியலூர் மாவட்டம், இலுப்பையூர் கிராமத்திலுள்ள வேங்கன் ஏரியினை வட்டாட்சியர்கள் மற்றும் நிலஅளவைத்துறை அலுவலர்கள் முறையாக சர்வே செய்து கணக்கெடுத்தப்பின், இந்த ஏரியில் கரைகள் அமைத்து பலப்படுத்தும் பணி சீரமைப்பு பணிகள் நடத்தப்படும்.

இந்த ஆண்டு பருவமழை காலங்களில் ஏரி முழுவதும் மழை நீர் சேகரிக்கப்பட்டு, விவசாயம் செழிக்கவும், குடிநீர் தட்டுப்பாட்டை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெறவுள்ளது. மேலும், ஏரியினை சீர்செய்யும் விதமாக ஏரிகளில் எடுக்கப்படும் வண்டல் மண்களை தங்களது விவசாய நிலங்களுக்கு விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, வட்டாட்சியர் கதிரவன், வட்டார வளர்ச்சி அலுவலர் கலையரசன், வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, நிலஅளவைத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**